Registered as a Newspaper in Ceylon

விசேஷ பதிப்பு

# ஈழநாடு

EELA NADU

தேசிய லொத்தர் (சுவீப்)

ஏகவிநியோகஸ்தர்கள்:

கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்

நல்லூர், யாழ்ப்பாணம்.

தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.

சப் ஏஜன்ஸ் தேவை

உடனே தங்கள் விலாசமிட்ட றப்பர் ஸ்ராம்புடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

போன் 389 National Tamil Da'ly தேசிய தினசரி பறபெட்டி எண் 9

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 15 ஆம் நாள் முஹர்ரம் 15 (28-5-64) வியாழக்கிழமை இதழ் 109

# யமுனை நதிக்கரையில் பூதவுடல் தகனம்

## சிறிதுநேரத்தில் நிகழும்;

### தலைவர்களும் மக்களும் கண்ணீர் சொரிய கலந்துகொண்ட காட்சி

புதுடில்லி, மே 28

முடியுடை மன்னர்களும், குடியரசுத்தலைவர்களும் லட்சக்கணக்கான மக்களும் கண்ணீர் சொரிய, பல்வேறு மதத் தலைவர்கள் வேதபாராயணஞ் செய்யவும் ரகுபதிராகவ ராஜாராம் பஜனையுடன் பாரதத்தின் முடிசூடா மன்னரும், மாந்தருள் ஒரு மாணிக்கமுமான பண்டித ஜவஹர்லால் நேருவின் பூதவுடல் புதுடில்லியில் யமுனை நதிக்கரையில், ராஜ்காட்டில் காந்தி சமாதிக்கருகில் மூந்நூறு கஜதூரத்தில் பூரண ராஜாங்க மரியாதைகளுடன் தகனம் செய்யப்படவிருக்கிறது. இந்திராவின் மகன் நேருவின் பேரன் சிதைக்குத் தீ மூட்டுவார்.

தியாகச் செம்மல் பண்டிட் ஸ்ரீநேருவின் பூதவுடல் சரியாக 11-5க்கு அவரது இல்லத்திலிருந்து யமுனைக் கரைக்கு ராஜாங்க மரியாதைகளுடன் இரதத்தில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. ஊர்வலப் பாதையில் முப்படைகளையும் சேர்ந்த பத்தாயிரம் வீசர்கள் அணிவகுத்து நின்றனர். ஊர்வலத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்த தலைவர்களும், வெளிநாட்டுத் தூதுவர்கள், இந்திய ராஜ்ய முதன் மந்திரிகள், பார்லிமெண்ட் கள் அங்கத்தவர்கள், பல லட்சக் கணக்கான மக்கள் குழந்தைபிறிட்டுக்கொண்டு வந்த அழுகையை அடக்கமுடியால் அடக்கியபடி சென்றனர்.

### காலடியில் 'சிங்கம்' சிலையாக நின்றது

நாற்பத்தாறு கோடி மக்களின் தலைவர், ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேருவின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் முதல் ண்பகல் வரை அவரது இல்லத்தில் பொது மக்களின் தரிசனத்துககாக வைக்கப் பட்டிருந்தது. நேற்றிரவு முதல் இன்று நண்பகல் வரை மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அமைதியாக அணிவகுத்துச் சென்று தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். மறைந்த தலைவரின் காலடியில உலகின் பல நாடுகளின் தலைவர்களின் சார்பில் மலர் வளையம் சாத்தப் பட்டிருந்தது. பிரிட்டிஷ் மகாராணி, அமெரிக்க ஜனதிபதி, சோவியத் பிரதமர் குருஷ்சேவ், சீனப் பிரதமர் சூ-என்-லாய் ஆகியோரின் சார்பிலும் மலர் வளையங்கள் வைக்கபபட்டிருந்தன. காஷ்மீரின் முன்னைள் பிரதமரும் "காஷ்மீர் சிங்கம்" என்றழைக்கப்படும் ஜனப் ஷேக் அப்துல்லா தலைவரின் இறுதி யாத்திரை ஆரம்பிப்பதற்கு சில மணிநேரத்துக்கு முன்பாக மலர் வளையம் ஒன்றைக் கொண்டுவந்து, "பாகிஸ்தானுக்குச் சென்று வருக!" என்று சில தினங்களுக்கு முன் தம்மிடம் கூறிவிட்டு தாம் திருமபுமுன்னரே இவ்வுலகை விட்டுச் சென்ற தலைவரின் பாதங்களில் வைத்துவிட்டு, பாதத்தின் அருகில் கண்களிலிருந்து கண்ணீர் ஆறுகப் பெருகி வழிய, கைகட்டியபடி சிலையாக நின்றார். நேருவின் தோட்டக் காரராகப் பல வருடங்கள் பணிபுரிந்த ஹிராலாலும் தலைவரின் கலடியில் கைகூப்பியபடி சிலையாக நின்றார்.

## இறுதியாத்திரையின் சோகக் காட்சிகள்

புதுடில்லி. மே 28

பிரதமரின் இல்லத்திலிருந்து இன்று பகல் சரியாக 1-15க்கு நேருஜீயின் பிரேத ஊர்வலம் ஆரம்பமானபொழுது ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர்விட்டு வாய்விட்டு கதறியழுதனர் பிரதமர்நேருஜீ உயிருடன் இருக்கும் பொழுது அடிக்கடி வெளியில் செல்லவும் அவரது இல்லத்துக்கு வரவும் அவர் உபயோகிக்கும் பாதைவழியாக இன்று அவரது இறுதி யாத்திரையும் ஆரம்பமானது.

இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் செல்ல லட்சக்கணக்கானேர் சுற்றுப்புறமும் கடல் மாதிரி சூழ்ந்து நின்று கண்ணீர் வடிகக பிரதமர் நேருவின் இறுதி யாத்திரை ஆரம்பமானது. அவரது சடலத்தின் பின்னர் நேருஜியின் சகோதரிகளான ஸ்ரீமதி விஜய லட்சுமி பண்டிட், கிருஷ்ண ஹத்தீசிங், நேருஜியின் மகள் இந்திராகாந்தி ஆகியோர் திறந்த காரில் சென்றுகொண்டிருந்தனர். இவர்களுக்குப் பின்பாக இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்ஸ் டக்ளஸ்ஹியூம், பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு புட்டோ ஆகியோரும் மற்றும் பல தலைவர்களும் சென்று கொண்டிருந்தனர்.

லட்சக்கணக்கான மக்கள் கண்களில் நீர்மல்க, தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்திக்கொண்டிருந்தனர். மரங்களிலும் பெரிய கட்டிடங்களிலும் மக்கள் குழுமி நின்று கதறியழுதுகொண்டிருந்தனர்.

பிரேத ஊர்வலத்தின் போது "சாச்சா நேரு" என்ற குரல்கள் விண்ணைப்பிளப்பதாகவிருந்தன. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பிரேத ஊர்வலம் ராஜ்காட்டுக்குப்போய்ச் சேரவில்லை.

## நாடெங்கிலும் வெள்ளை கறுப்பு கொடிகள்

### மறைந்த இந்திய தலைவருக்கு இலங்கை மககள் அஞ்சலி

கொழும்பு, மே 28

இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவுக்கு முகமாகவும மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்து முகமாகவும் நாடெங்கிலும் அரசாங்கக் காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. தேயிலை, ரப்பர் தோட்டங்களில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் துக்கம் அனுஷ்டித்தனர். சினிமாத் தியேட்டர்களில் படக்காட்சிகள் யாவும் ரத்துச்செய்யப் பட்டுவிட்டன. நாட்டின் பல இடங்களிலும் வெள்ளைக்கொடிகளும் கறுப்புக்கொடிகளும் பறககவிடப்பட்டுள்ளன. அரசாங்க காரியாலயக் கட்டிடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

## 'மாபெரும் தலைவர், சிறந்த ராஜதந்திரி சமாதானத்தூதர்'

### என். எம். - கெனமன் அஞ்சலி

கொழும்பு, புதன்

"ஸ்ரீ நேருவின் மறைவு உலகுக்கு மிக்கதொரு துயர நிகழ்ச்சி" என சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தமது அனுதாபச் செய்தியில் தெரிவிதுள்ளார்.

டாக்டர் என். எம். தமது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் வாழ்வு மறுமலர்ச்சிக்கு ஸ்ரீ நேரு உழைத்தார். உலகில் ஆசியாவின் நிலையை உயர்த்திய ஒரு மாமலலரை இழந்துவிட்டோம்.

**கெனமன் செய்தி**

"இந்தியா ஒரு பெரிய தேசாபிமானியை, ஒரு பெரிய தலைவரை இழந்துவிட்டது இல

(4-ம்பக்கம் பார்க்க)

## 'அறிவுச்சுடர் அணைந்துவிட்டது'

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்தியத் தலைவர் திரு. நேருவின் மறைவு குறித்து உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் விடுத்த அனுதாபச் செய்தி வருமாறு:

"பாரதத்தின் அறிவுச்சுடர் அணைந்துவிட்டது. 60 ஆண்டுகளாக இந்திய மக்களின் மனங்களிலெல்லாம் ஜோதியாக இருந்த பண்டிதர் ஜவகர்லால் நேரு மறைந்துவிட்டார், இந்தியமக்களுக்கு மட்டுமல்ல அல்லல்பட்டு அடிமைகளாக விருந்த எல்லாநாட்டு மக்களுக்கும், சுதந்திரத்திற்கு வழி காட்டிய வீரபுருஷன் வீரசுவர்க்கம் அடைந்துவிட்டார். உலகசமாதானத்துக்கு அல்லும் பகலும் உழைத்த சமாதானப் பிரியன் குரல் உலக சபைகளில் இனிமேல் கேட்காது. நேருவில்லாத பாரதத்தின் எதிர்காலம் என்னவென்று நாமெல்லாம் ஏங்குகின்றோம் ஆனல் ஒப்பற்ற தலைவர்களின் தியாகத்தைக்கொண்டு உருவாகிய சுதந்திரபாரதம், நேரு காட்டிய ஜனநாயக சோஷலிஸ வழியிலே, ராமராஜ்யததை அடைத்தேதீரும். நேரு மறைந்துவிட்டார். ஆனல் அவருடைய இலட்சியஙகள் மனித சமுதாயம் இருக்கும்வரை ஒளிர்விட்டு பிரகாசிக்குமென்பதில் ஐயமில்லை. நம்முடைய இந்திய சகோதரர்களுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

# மறைந்த தலைவருக்கு லட்சக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்

# அமெரிக்கா, ரஷ்யா, சீனு, பாக். உட்பட பல நாடுகள் அனுதாபம்

## ஐ. நா. கொடி அரைக்கம்பத்தில் முதற்தடவையாக பறந்தது!

புதுடில்லி, மே 28

பிரதமர் நேருவின் மரணம் குறித்து உலகின் சகலபகுதிகளி லும் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் ஜோன் ஸன், எலிஸபெத் மகாராணி, பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் உள்ளிட்டு நூற்றுக்கணக்கான நாட்டுத் தலைவர்கள் அனுதாபச் செய்திகளை இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். பிரதமர் நேரு வின் பூதவுடல் இன்று பிற்பகல் ஒருமணியளவில் ஊர்வலமாக ராஜகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்றுமாலை அவரின் உடல், மகாத்மாகாந்தியின் சமாதிக்கு 300 யார் வடக்கே தகனம் செய்யப்பட்டது.

### மூன்று லட்சம் பேர் அஞ்சலி

காலம்சென்ற பிரதமர் நேருவின் பூதவுடல், அவரது இல்லத்திலுள்ள பெரிய அறை யொன்றில் பொதுமக்கள் தரிசனத்துக்காக இன்று வைக்கப்பட்டிருந்தது. அவரின் பூத வுடலை சுதந்திர இந்தியாவின் மூவர்ணக் கொடி மறைத்துக் கொண்டிருக்கிறது. சாந்தமே உருவாக அமைந்திருக்கும் நேருஜியின் திருமுகம், தாமரைத் தண்டுகளுக்கு நடுவே, தாமரை மலர்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒருபுறத்தில் சந்தனக் குழம்பு வேதனையுடன் தனது மணத்தை வீச, மறுபுறம் தன்னுடலையே உருக்கி மற்றவர்களுக்கு சேவையாற்றும் சந் தனக் குச்சுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையே நேருஜியின் அருகில் பண்டி தர்கள், வேதியர்கள், பலசமயத்தவர்கள் வேதநூல்களிலுள்ள சுலோகங்களைப் படித்துக் கொண்டிருக்க, ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் பெருக்குடன் தங்களது இறுதி அஞ் சலியை உலகத்தலைவர், சமாதானத் வீரர் நேருஜிக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றனர். பூதவுடலைச்சுற்றி எம். பி.க்கள், மந்திரிகள், ராஜியத் தூதுவர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் தங்களது இறுதி அஞ்சலியைத் தெரிவிக்கும் பொருட்டு அங்கு அமர்ந்திருக்கின்றனர். பிரத மர் நேருவின் இல்லத்துக்கு வெளியே நீண்ட 'கியூ' வரிசையிலிருந்து மக்கள் நேருஜியின் பூதவுடலுக்கு மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர். நாட்டின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் இன்று காலைவரை சுமார் பத்து லட்சத்து எண்பதினாயிரம் மக்கள் நேருஜிக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்,

### ஐ. நா.வில் என்றுமில்லாத சோகக்காட்சி

பிரதமர் நேருவின் மரணச் செய்தியை நேற்று ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் தலைவர் திரு. செய்து அறிவித்தபொழுது அங்கத்தினர்கள் பேரதிர்ச்சியடைந்தனர். கூட்டத் துக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் கண்கள், நீர்க்குழமாயின. பலர் கண்ணீர்விட்டனர். சபைத்தலைவர் அப்பொழுது தெரிவிக்கையில், "உலகம் இன்று ஒரு இலட்சிய புரு ஷரை இழந்துவிட்டது" என்று கூறினர். சமாதானத்துக்காக வாழ்ந்து தனது நாட்டின் முன னேற்றத்துடன் உலகநாடுகளின் முன்னேற்றத்திலும் பெரும் பங்கெடுத்த ஓர் இலட்சிய வீரரை இழந்துவிட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டின் உத்தரவுக்கிணங்க நேற்று ஐக்கியநாடுகள் சபையின் நீலநிறக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. வேறுநாடுகளின் கொடிகள் அகற்றப்பட்டு ஐ. நா. கொடிமட்டும் பறக்கவிடப்பட்ட இந்தச் சம்பவம் முன்னர் எப்பொழு துமே நடைபெறவில்லை. நேற்றைய ஐ. நா. பாதுகாப்புசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. நேருவின் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு ஐ. நா. பாதுகாப்புசபை கூட்டமொன்றை நடத்தியது.

நேருஜியின் மரணம் குறித்து ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தெரிவிக்கையில் தனது நாட்டுக்கும் உலகத்துக்கும் ஆற்றிய சேவைகளில் நேருவைப் போன்றவர்கள் ஒரு சிலரே என்றும் ஒப்பற்ற தலைவரை இழந்து ஒரு நம்பிக்கை ஒளிவிளக்கை அணையவிட்டு இன்று உலகம் தவிக்கிறது என்றும் கூறினர்.

### அதிபர் ஜோன்ஸனின் புகழுரை

நேருவின் மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்ற அமெரிக்க அதிபர் திரு. லிண் டன் ஜோன்ஸன், "நேருஜியின் மறைவு ஒரு பேரிழப்பு" என்று தெரிவித்தார். "சமாதான சிற்பியாக விளங்கிய நேருவை உலகமக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பதற்கு யுத்தமில் லாத ஒரு உலகத்தைச் சிருஷ்டிப்பதே சிறந்த முறையென்றும் நேருவின் நினைவுச் சின்னமாக விளங்கக் கூடியதும் இதுவே" என்றும் திரு. ஜோன்ஸன் குறிப்பிட்டார்.

### சீனப் பிரதமர் சூ-என்-லாய் அனுதாபம்

பிரதமர் நேருவின் மரணம் குறித்து சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் நேற்று அனுதாபச் செய்தியொன்றை இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுப் பிவைத்துள்ளார். நேருவின் மரணம் குறித்து தாங்கள் அதிர்ச்சியடைவதாகவும் தமது அரசாங்கத்தினதும் நாட்டு மக்களினதும் அனுதாபத்தை ஏற்றுக் கொள்ளும்படியும் திரு. சூ-என்-லாய் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### குருஷ்சேவ் அஞ்சலி

நேருவின் மரணம் குறித்து தாம் அதிர்ச்சியடைந்ததாக சோவியத் பிரதமர் குருஷ் சேவ் தெரிவித்தார். மாஸ்கோவிலுள்ள இந்திய ஸ்தானிகராலயத்துக்குச் சென்று "அனு தாப புத்தகத்தில்" கையெழுத்திட்ட பிரதமர் குருஷ்சேவ் "உலகில் நிரந்தர சமாதானங் நிலவவேண்டுமென்று விரும்பிய பிரதமர் நேருவை உலகம் இழந்தது - சமாதான உலக்கு ஒரு பேரிடி" என்று குருஷ்சேவ் தெரிவித்துள்ளார்.

### கண்கள் கலங்கிய பிரதமர் ஸ்ரீமா

நேருவின் மரணம் குறித்து பேரதிர்ச்சியடைந்து, உடனடியாக இலங்கையிலிருந்து புறப்பட்ட பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று காலை புதுடில்லிவந்து சேர்ந்தார். இலங்கை கடற்படை விமானத்தில் வந்திறங்கிய பிரதமர் ஸ்ரீமாவுடன் வெளி விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ டயஸ், பிரதமரின் அந்தரங் கக் காரியதரிசி டாக்டர் எம். ரத்வத்தை, பிரதமரின் புதல்வன் அனுரா ஆகியோர் வந் திருந்தனர். விமானத்திலிருந்து பிரதமர் ஸ்ரீமா இறங்கியதும் அவரின் கண்கள் கலங்கியி ருந்தன. உணர்ச்சிவசப்பட்டு எதுவும் பேச முடியாமல் அவரின் தொண்டை அடைத்துக் கொண்டது. பிரதமரை, புதிய இந்தியப் பிரதமர் திரு. குல்சாரி லால் நந்தாவும் மத்திய மந்திரி திரு. சுவர்ண்சிங்கும் வரவேற்றனர். அப்பொழுது பிரதமர் ஸ்ரீமாவினல் ஒன்றுமே பேச முடியாது போய்விட்டது நேருவின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்த இந்தியாவு க்கு வந்த வெளிநாட்டு தலைவர்களில் இலங்கைப் பிரதமர் தான் முதலில் இங்கு வந் தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அனுதாபம்

கொழும்பு, வியாழன்

நேருவின் மறைவு குறித்து இலங்கை இன்று துக்கம் அனுஷ்டித்தது. இன்று அர சாங்க வங்கி, வர்த்தக விடு முறையாகும்.

நாட்டின் பல பகுதிகளிலும் இன்று அனுதாபக் கூட்டங் கள் நடைபெற்றன. கடைகள் மூடப்பட்டிருந்தன. அரசாங் கக் கட்டிடங்களிலெல்லாம் இல ங்கைக்கொடிகள் அரைக்கம்பத் தில்பறக்க விடப்பட்டிருந்தன.

இன்று நடைபெறவிருந்த தேயிலை, ரப்பர் ஏல விற்பனை நாளை வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று துக்கம் அனுஷ்டித்தது. தொழிலாளர் கள் வேலைக்குச் செல்லவில்லை. இலங்கை மலபார் முஸ்லிம் சங்கமும் அகில இலங்கை வர்த்தக சங்கமும் இன்று துக்கம் அனுஷ்டித்தன.

கொள்ளுப்பிட்டியில் இன்று காலையும் மாலையும் சில மணி நேரம் வரை இந்திய ஸ்தானி கராலயம் திறந்திருந்தது. அங்கு ள்ள 'துக்கபுஸ்தகத்தில்' பொது மக்கள் தங்களது அனுதாப த்தைத் தெரிவித்திருந்தனர்.

# 'நாட்டின் ஒரு சகாப்தமே முடிந்துவிட்டது'

## புதிய பிரதமர் நந்தா அஞ்சலி

புதுடில்லி, மே 28

"உலகமே சோக வெள்ளத் தில் மூழ்கிக்கொண்டிருக்கும் இக்கட்டத்தில் என்னைப் பிர தமர் பதவியை ஏற்கும்படி இந்திய ராஷ்டிரபதி கட்டளை யிட்டுள்ளார். மக்களின் ஒத் துழைப்புடன் இந்தப் பத வியை நான் பொறுப்பேற்கின் றேன்" என்று இந்தியாவின் இரண்டாவது பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தா தெரிவித் துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 4-30க்குப் புதிய பிரதமர் பதவியை ஏற்ற திரு. குல்சாரிலால் நந்தா நேற் றிரவு விடுத்துள்ள ஒரு செய் தியில்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவின் முன்னேற்றத் துக்காகப் பிரதமர் நேருஜி எவ்விதம் பாடுபட்டாரோ அதே போன்று நாம் முன் னேற்றப் பாதையில் செல்ல மக்கள் ஒத்துழைக்கவேண்டும். இந்தியாவின் நலனுக்காகப் பிரதமர் கொண்டிருந்த இலட் சியங்களை நிறைவேற்ற மக்கள் முன்வரவேண்டும் என்றும் திரு. குல்சாரிலால் நந்தா தெரி வித்தார்.

தனி மனிதனின் பெருமுயற்சி யினல், சிறந்த ஆற்றலினல் ஒரு நாடு முன்னுக்கு வந்த தென்றால் அந்தப் பெருமை இந்தியாவுக்குத்தான் சாரும் பிரதமர் நேரு நம்மை விட்டுப் பிரிந்ததன் மூலம் இந்தியா வின் ஒரு சகாப்தமே இப் பொழுது முடிவுக்கு வந்துவிட் டது. அவரது இலட்சியப் பாதையைப் பின்தொடர்ந்து அவரின் இலட்சியங்களை நிறை வேற்றுவதுதான் நாம் நமது தலைவருக்கு ஆற்றும் சிறந்த -மகத்தான பணி என்றும் குல் சாரிலால் நந்தா தெரிவித்துள் ளார்.

---

## நேரு மறைவிற்கு சாரணர் அனுதாபம்

யாழ்ப்பாணம், வியா:

காலஞ்சென்ற பாரதப் பிர தமர் ஸ்ரீநேருவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் பொ ருட்டு, நேற்றுமாலை நடை பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் இயக்கத் தின் வருடாந்த விழாவில் இரண்டு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டதோடு கொடியும் அரைக்கம்பத்தில் தொங்கவிடப்பட்டது.

சாரணர்களால் கட்டப்பட்ட மாதிரி விடுதியை பிரதம கமி

(4-ம் பக்கம் பார்க்க)

RADHA GURU TOOTH POWDER
is the best

Radha Guru Tooth Powder makes the teeth white only Tooth Powder contains medicinal herbs to kill germs in the gum, if your teeth are shaking please use
RADHA TOOTH POWDER.

ராதா குரு பற்பொடி

★ பற்களை வெண்மையாக்கி, வாய்நாற்றத்தைப் போக்கி பற்களுக்கு பூரணமான பாதுகாப்பு அளிக்கிறது.

★ பல்வலி, பல்அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும்.

தயாரிப்பாளர்கள்:
"ராதா புரடக்ஸ்"

ஏகவிநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 541
160, செட்டியார் தெரு, கொழும்பு-11

கிடைக்குமிடம்:
குமாரவேல் மருந்துச் சரக்கு மளிகை, பருத்தித்துறை.
எஸ். எஸ் அன்னலிங்கம், 73, பிரதான வீதி, மாத்தளை.
பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ், மெயின் வீதி, பண்டாரவளை.
ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், திருக்கோணமலை.
ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்
எஸ். எம். ஆர். எம். எஸ். செல்லையாபிள்ளை, ராகலை.

# சுத்தமான பால்



# நெஸ்பிரே

நிலையான புதுமை
நிர்மலமான ரகம்
நிகரிலா சிக்கனம்

பலமானது,
நலமும் பலமும் அளிக்கும்
நல்ல சமதையான ஆகாரத்தின்
ஒரு அத்தாவசியமான
அங்கமாகத் திகழ்கின்றது.

குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும்
நாளாந்தம் முழு ஆடைப்பாலைக்
கொடுத்து வாருங்கள்.

அதிமான பாலைப் பருகுங்கள்.....
முழு ஆடை நிரம்பிய நெஸ்பிரே
பவுடர் பாலை அருந்துங்கள்.




நெஸ்பிரே பாதுகாப்பான பால்




# கலை கைப்பணி விழா
## வவனியா, பிரதேச கலாமன்றஏற்பாடு

வவனியா, வியாழன்

ஜூன் மாதம் 26-ம், 27-ம், 28-ம் தேதிகளில் வவனியா நகரசபை மண்டபத்தில் கலை விழா ஒன்றை நடத்த வவனியாப் பிரதேச கலா மன்றம் ஏற்பாடுகள் செய்துவருவதாக வவனியா அரசாங்க அதிபர் திரு. பீ. எச். பிரேமவர்த்தன அறிவித்துள்ளார். இவ்விழாவில் பரதநாட்டியம், கண்டிய நடனம், நாட்டுக் கூத்து, நாட்டுப்பாடல், கரகம், கோலாட்டம், கர்நாடக சங்கீதம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். விழாவைக் கலாசார சேவை அதிபர் திரு. பாலித்த வீரமன் திறந்து வைப்பார்.

விழாவில் நிகழவிருக்கும் கருத்தரங்கு ஒன்றில் பேராசிரியர்கள் ஏ. சரத்சந்திர, கே. கணபதிப்பிள்ளை, விரிவுரையாளர் சு. வித்தியானந்தன், கலையரசு கே. சொர்ணலிங்கம், இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

விழாவினையொட்டி, கலை கைப்பணிக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கண்காட்சியை வவனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் திறந்துவைப்பார்.

மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். மற்றைய இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். ஒவ்வொரு நாளும் இரவு 11 மணிவரையும் நிகழ்ச்சிகள் உண்டு.

# 'பழைய தபாற் கந்தோரை யாழ். பட்டின தபால் நிலையமாக்குக'
## அஞ்சல் மா அதிகாரிக்கு மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த திங்கட்கிழமை பிரதான தபால்நிலையம், யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதால், காலியாக இருக்கும் பழைய கட்டிடத்தில் "யாழ்ப்பாண பட்டினத் தபால் நிலையம்" என்ற பெயரில் ஒரு புதிய தபால் நிலையம் திறக்கப்படவேண்டுமென்று யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராஜா அஞ்சல் மா அதிகாரியைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்புதிய "பட்டினத் தபால் நிலையம்" சுண்டிக்குழி, வண்ணார்பண்ணையில் உள்ள தபால் நிலையங்களை ஒத்ததாக அமைய வேண்டுமென்றும், அப்படிப்பட்ட ஒரு தபால்நிலையத்தைத் திறப்பது, முதலாம் வட்டாரத்துப் பொதுமக்களுக்கு மாத்திரமல்லாது, பழைய தபால் நிலையத்துக்குச் சமீபமாகவிருக்கும் மறியற்சாலை, நீதிமன்ற அலுவலகங்கள், மாநகரசபை அலுவலகம், தகுதிகாண் அலுவலகம், வாடி வீடு, சுங்கப் பகுதி, அரசாங்க மரக்காலை முதலிய அலுவலகங்களுடன் தொழில் புரிபவர்களுக்கும், அவ்வலுவலகங்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்றும் திரு. துரைராஜா வற்புறுத்தினர்.

பழைய தபாற்கந்தோர் கட்டிடத்திற்கு அருகிலுள்ள அரசாங்க மரக்காலையில் மரம் வாங்குவோர் யாவரும் வைப்புப் பணத்தை தபால் நிலையத்தில் செலுத்தி மாவட்ட வன பரிபாலன உத்தியோகத்தர் மேயருக்கு அஞ்சல் கட்டளைகளைப் பெற வேண்டியுள்ளது. யாழ்நகரின் பிரபல ஹோட்டல்கள் வர்த்தக ஸ்தாபனங்கள் பலவும், நான்கு முக்கிய கல்லூரிகளும், மற்றும் பிரபல வைத்தியப்பிரமுகர்களும் இங்கு இருப்பதாலும் ஒரு தபால் நிலையம் இங்கு அமைய வேண்டியது அவசியமென்றும் மேயர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே, அஞ்சல் மா அதிகாரிக்குத் தாம் அனுப்பிய கடிதத்தை ஞாபகப் படுத்திக் கடிதத்தின் அடக்கத்தை விளக்கிய மேயர் ஜூன்மாதம் முடியுமுன்னர் இப்புதியதபால் நிலையத்தை அமைத்துத் தரும்படியும அஞ்சல் மா அதிகாரியைக கேட்டுக் கொண்டார். முதல்வரின் கோரிக்கையையிட்டு கவனஞ் செலுத்துவதாக அஞ்சல் மா அதிகாரி தெரிவித்தார்.

# அமெரிக்காவுக்கு ரஷ்யா உதவும்
## மிக்கோயன் கருத்து

டோக்கியோ, மே 28

தென்வியட்னமில் ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடிகளை சமாளிக்க அமெரிக்காவுக்கு சோவியத் யூனியன் உதவி செய்யும் என்று சோவியத் யூனியன் முதலாவது உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் இங்கு தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள திரு. மிக்கோயன் இங்கு நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். இந்தப் பேட்டியின்போதுதான் அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அமெரிக்காவுக்கு பல உதவிகள் அளிக்க ரஷ்யா முன்வந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

லாவோஸ் நிலைமை பற்றி அவர் குறிப்பிடுகையில் லாவோஸில் கலப்பு அரசாங்கமொன்றை அமைப்பதையே ரஷ்யா விரும்புகிறதென்றும், இக்கலப்பு அரசாங்கத்தில் மூன்று தரப்பினருக்கும் இடமளிக்கவேண்டுமென்றும் கூறினர்.

சீன-சோவியத் நெருக்கடி பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு திரு. மிக்கோயன் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

கிழக்கு, மேற்கு வல்லரசுக் குமுறல்களை அகற்ற சோவியத்யூனியன் பாடுபடுமென்றும் அவர் கூறினர்.

---

## "உரிமை கோருவதில் இது ஒருவிதம்"

மாஸ்கோ, மே 28

கடந்த இரு ஆண்டுகளிலும் ஐயாயிரத்துக்குமதிகமான எல்லைச் சம்பவங்களை ரஷ்யாவுக்கு எதிராக சீனு தூண்டிவிட்டதென்று அறிவித்த ரஷ்யா; சோவியத் யூனியனுக்குச் சொந்தமான எல்லைகளில் சீனர்கள் ஆட்டையும், மாட்டையும் அனுப்பிவிட்டு அவர்கள் காணிச் சொந்தம் பாராட்டுகிறார்கள் என்று குற்றம் சுமத்தியுள்ளது.

---

யாழ்ப்பாணம், புதன்

அராலி வடக்கு கலைவாணி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில நடைபெற்றது. அத்தினத்தில் நிலையத்தார் விளையாட்டுப் போட்டியொன்றையும் நடத்தினர்கள். இவ்விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் வெற்றியீட்டியது. விழா இறுதியில் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

# "திருப்பணிகள் மூலம் தமிழினம் கவலையை மறக்க வேண்டும்"

## திருக்குறள் மகாநாட்டில் சேர். கந்தையா யோசனை

உடுப்பிட்டி, புதன்

"மகாநாடு கூட்டி வள்ளுவனைப் போற்றுவதோடு எமது கடமை முடியுமானால் நாம் திரளாகத் திரண்டுவருவதில் அர்த்தமேயில்லை. இறைவன் ஒருவனது மானிட வழிபாட்டிற்காகத்தான் மானிட ஜன்மம் பிறந்துள்ளது என்பதே திருக்குறளின் முடிபு. திருக்குறள் பற்றி ஆராயும் எவ்வழியும் ஒரே முடிபுக்குத் தான கொண்டுசெல்லும்.

தமிழராயினும் சரி, சிங்களவராயினும் சரி, அல்லது வேறு எந்த இனத்தவராலும் 'தனக்குவமை இல்லாதவனின் தாள்' சேர்ந்தால்தான் அவர்களுக்கு உய்வுண்டு. மகாநாட்டுப் பந்தல் வெளியிலே பார்வைக்கு அலங்கோலமாக இருந்தாலும் உள்ளே அழகாக இருப்பதுபோலவே மனமும் வெளிக்கு எப்படியானாலும் உள்மனம் நன்றாக இருக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

திருவள்ளுவர் காட்டிய அறவழியே நின்று வாழ்பவன் கட்டாயம் இறைவனை அடைவான் என்கிறார் நாவுக்கரசர். சமயவாழ்வு வாழவேண்டிய அவசியத்தை மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இத்தகைய வாழ்வின் அவசியத்தைக் கடைப்பிடிக்கும் குறளுக்கு விழாவெடுப்பது பெருமையே."

கரணவாயில் தமிழ்மறைக் கழக ஆதரவில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த சேர் கந்தையா வைத்தியநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், இக்காலத்தில் தமிழினம் தனக்கு நேர்ந்துள்ள கவலையை மறக்கவேண்டுமானால் புராதன ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் முதலியவற்றிற்கு ஆலயத் திருப்பணிகளை செய்ய வேண்டுமென்றும், அதற்கான ஆதரவை இலங்கைவாழ் சைவத் தமிழ்மக்கள் நல்குவார்களெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

திருவள்ளுவர் வைதீகநெறியைத் தழுவியவரா? அல்லது தமிழ்நெறியைத் தழுவியவரா என்னும் பொருள்பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் 'தமிழ்மொழியைத் தழுவினர்' என்பது பற்றி புதுமைலோலன், நாவேந்தன், நீ. மே. யோ. வேதநாயகம் ஆகியோரும், 'வைதிக நெறியைத் தழுவினர்' என்பதுபற்றி வித்துவான் க. கார்த்திகேசு, ஈழவேந்தன், சி. நமசிவாயம்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

திரு. புதுமைலோலன் பேசுகையில் திருக்குர்ரானுக்கும் பைபிளுக்கும் அடுத்தாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறளேயென்றும் இது வர்ணாச்சிரமத்தையோ அன்றி வைதீகத்தையோ தழுவியிருந்தால் இன்று உலகப் பொதுநூலாக வந்திருக்கமுடியாதென்றும் மதமென்ற பேழைக்குள் வள்ளுவர் திருக்குறளை அடக்கியிருந்தால் அதன் பெருமை குன்றியிருப்பதுடன் தமிழின் சிறப்பும் குன்றியிருக்குமென்றும், தமிழ்நெறி உலகம் வாழ நினைக்கின்ற நெறியென்றும் கூறினர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில், "திருக்குறள் மாத்திரம் தமிழ்நெறியுடன் உள்ள நூல் என்றோ பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதென்றோ கூறமுடியாது. ஏனெனில் பகவத் கீதையும் மற்றும் உபநிடதங்களும்கூடப் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்றார்.

தமது குதற் குறளிலேயே—(ஆதி, பகவன், உலகு ஆகிய மூன்று) வட சொற்களை உபயோகித்த வள்ளுவர் தமிழ் நெறியைப் பின்பற்றினர் என்று எப்படிக் கூறமுடியும்? வள்ளுவரது கருத்துக்களைத் தொகுத்து ஆராயுங்கால் வைதீக நெறியைத்தான் கூறுகிறான் என்பதைத் தெளிவாக உணர முடியும்" என்றும் கூறினர்.

திரு. நாவேந்தனும் பேசியபின், தலைவர் தமது முடிவுரையில் "நூற்றுக்கு ஒருவீதம் வட சொற்கள் கலந்துள்ளபோதும் தமிழர் பண்பாட்டையும் வாழ்க்கை முறைகளையுமே கூடுதலாகக் காணமுடிவதால் வள்ளுவர் தமிழ்நெறியையே பின்பற்றினர் எனக் கருதலாம்" என்று கருத்துத்தெரிவித்தார்.

பேச்சு, கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சேர் கந்தையா வைத்தியநாதன் பரிசில்கள் வழங்கினர்.

தமிழ்மறைக் கழகச் செயலாளர் திரு. நீ. மே. யோ. வேதநாயகம் நன்றி கூறினர்.

பின்னர் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகத்தினரால் பின்வரும் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன.

1. தமிழ்மக்கள் தம் ஜீவாதார உரிமைகளைப் பெறுவதற்காக இந்நாட்டில் எமக்குரிய ஸ்தானத்தை நிலைபெறச் செய்வதற்காக வர்ணபேதம் பாராட்டாதும், அரசியல் கட்சி பேதம் பாராட்டாதும் ஒன்று நின்று உழைவின்றித் தாழாது ஆற்றுவார்களாக என எமது கழகம் வேண்டுகிறது.

2. தமிழ்மக்கள் தம் ஜீவாதார உரிமைகளை அரசாங்கம் மறுப்பதையும் அலட்சியம் செய்வதையும் எமது மகாநாடு வன்மையாகக்கண்டிப்பதுடன் இம்மகாநாடு தமிழ்மக்களை ஒன்று கூட்டி சாத்வீகவழியில் அரசியலாருடன் போராடத் தீர்மானித்துள்ளது.

இறுதியாகக் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் பழகப்பெற்று இசையரசு திரு. மு. கனகரத்தினத்தினால் டைரக்ட் செய்யப்பட்ட 'பாசத்தின் பரிசு' என்னும் சமூகநாடகம் நடைபெற்றது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
David Niven — Sordi
in
The Best of Enemies
(Technirama - Eastman color)



இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ண (திருமலை) ஜுப்பிட்டர் (குருணாகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.


# "அணைந்த ஜோதி"

உலகமெலாம் உண்மை நெறி உரைத்த ஜோதி
உவகையுடன் உரிமைகளை உவந்த ஜோதி
உவமையிலாப் பேரறிவாம் நேரு ஜோதி
உயர் மோதிலால் நேரு தந்த ஜோதி.

சத்தியத்தின் வழிநின்ற சாந்த ஜோதி
சந்ததமும் காந்தி வழி வாழ்ந்த ஜோதி
சனநாயகம் வளர்த்த சத்ய ஜோதி
சன்மார்க்க நெறிநின்ற தர்ம ஜோதி.

கொள்கை தனின் மாறாத கோல ஜோதி
கொடுமைகளைச் சகிக்காக்கா ருண்ய ஜோதி
கொஞ்சும் குழந்தைகளைக் குலவு ஜோதி
கொற்றவரும் போற்றுகின்ற வெற்றிச் ஜோதி.

பாரதத்தாய் பெற்றெடுத்த பரம ஜோதி
பாமரரை வாழவைத்த பத்ம ஜோதி
பண்டிதரை போற்றுகின்ற பண்புச் ஜோதி
பாரதத்தை பாரினிலே பகர்ந்த ஜோதி.

சத்தியமே வெல்லுமெனச் சங்கமுதிச்
சண்டையிலே மாளாமற் றரணி தன்னைச்
சந்ததமும் சமாதான வழியே நின்று
சாந்தமுடன் அணைந்ததுவே நேரு ஜோதி.

— வி. க. ஆறுமுகம்

## அறிவுச்சுடர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து, பாரதத்தின் ஒப்பற்ற தலைவருக்கு அஞ்சலிசெய்வோம்".

### தூதரகத்தில் ஜனக்கூட்டம்

ஸ்ரீ நேருவின் மரணச் செய்தி கேட்டதும் இலங்கையிலுள்ள இந்திய தூதராலயத்துக்குப் பலர் சென்று இந்திய ஹைகமிஷனருக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார்கள்.

ரஷ்ய ஸ்தானிகர் உட்பட பல நாட்டுத் தூதர்கள் இந்திய ஹைகமிஷனரிடம் தமது துக்கத்தைத் தெரிவித்தார்கள்.

## நேரு மறைவுக்கு . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷனர் திரு. ஈ. டபிள்யு. கன்னங்கரா பார்வையிட்டார். அதன்பின் மாவட்ட கமிஷனர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் மாதிரி விடுதியைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவிற்கு யாழ். நகரசபை மேயர் திரு. ரி. எஸ். துரைராசா, நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன், முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் மற்றும் பலரும் பங்குபற்றினர்கள்.

## மாபெரும் . . .

(1- பக்க தொடர்ச்சி)

ங்கை ஒரு நல்ல நண்பனையும் ஆசியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் ஒபபற்ற ராஜதந்திரியையும் உலகின் சமாதான தூதுவரையும் இழந்துவிட்டோம்" என கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. பீட்டர் கெனமன் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

## 'முஸ்லீம்கள் சிங்களம் படிக்கவேண்டும்' —முன்னாள் எம். பி.

மக்கோனை, வியாழன்

"முஸ்லிம்கள் சிங்களமொழியைக் கட்டாயம் படிக்கவேண்டும். சிங்களத்தை இரண்டாவது மொழியாக எண்ணிப் படிக்காமல் எமது பிரதான மொழியாக எண்ணிக் கற்க வேண்டும்" என்று முன்னாள் வேருவலைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். ஏ. பகீர் மரிக்கார் களுத்துறையில் நடந்த முஸ்லிம்கள் கூட்டமொன்றில் பேசும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சிங்களப் பகுதிகளில்தான் முஸ்லிம்கள் அரசியல், சமூக வர்த்தகத் தொடர்புகளிலும், தொழில்புரிவதிலும் ஈடுபட்டிருப்பதால் கட்டாயமாகச் சிங்களம் படிக்கவேண்டும். அப்படிப் படிக்காவிட்டால் எல்லாவற்றையும் இழக்கவேண்டிய நிலைமை ஏற்படும்."


நாவல்மர விற்பனை

பலவித நீளங்களைக்கொண்ட தறித்த நாவல் மரங்கள் பாவனைக்கும் விறகுக்கும் கீழ்க்காணும் விலாசத்தில் எங்கேரமும பெற்றுக்கொள்ளலாம்.

வே. கைலாசபிள்ளை, மலாயன் பென்சனர், புத்தூர் கிழக்கு, புத்தூர். 457


# மறைந்த தலைவருக்கு . . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## பாக். மந்திரி புட்டோ நேரில் அஞ்சலி

நேருவின் மரணம் குறித்து பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் விடுத்துள்ள ஒரு அனுதாபச் செய்தியில்; "மாபெரும் உலகத் தலைவரை இழந்து விட்டோம்" என்று தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அரசாங்கத்தினதும் மக்களின் சார்பிலும் பிரதமர் நேருவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு இன்று பகல் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ புதுடில்லி வந்து சேர்ந்தார். ராவல்பிண்டியில் இன்று முழு நாள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும். நாடு பூராவும் இன்று பாகிஸ்தான் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டன.

## ஆசிய ஆபிரிக்க தலைவர்கள் அஞ்சலி

"மாபெரும் தலைவரை, உற்ற நண்பரை நேபாளம் இழந்து விட்டது" என்று நேபாள மன்னர் மகேந்திரா தெரிவித்துள்ளார். காட்மாண்டில் இன்று நேருவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு 19 தடவை பீரங்கிகள் வெடிக்கப்பட்டன. சகல அரசாங்க அலுவல்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா; "உலகுக்கு பெரும் இழப்பு" என்று அறிவித்துள்ளார். பர்மிய தலைவர் ஜெனரல் நீவின்; "உலக சமாதானத்துக்கு பெரும் சோதனை ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். பெல்ஜியம், நோர்வே, சுவிடன், கனடா, இத்தாலி, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, அல்ஜீரியா, கானா, இஸ்ரேல், கென்யா, உகண்டா, போலந்து, நியுஸிலாந்து மற்றும் பல நாட்டுத் தலைவர்கள் நேருவின் மரணத்துக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

ஐக்கி அரபு குடியரசில் ஒரு வார காலம் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த இடைவேளையில் சிலபொதுக்கூட்டங்களுக்கும் அரசாங்க வைபவங்களுக்கும் தடை விதிக்கப்டுள்ளது. விளையாட்டுப் போட்டிகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு அதிபர் டிகோல்; "ஓர் அரசியல் ஞானியை இன்று உலகம் இழந்துவிட்டது" என்று தெரிவித்துள்ளார்.